DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF PROCEDURE)
IN THE COURT OF DISTRICT MUNSIF, VANIYAMBADI, THIRUPATTUR DISTRICT

| | |
|---|---|
| Name | தபரோஸ் |
| Father's Name | அகமது பாஷா |
| Village | வாணியம்பாடி |
| Taluk | வாணியம்பாடி |
| Calling | தனியார் வேலை |
| Age | 43 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1872 on the day of 13.11.2025

**O.S. No.70/2021** **பி.வா.சா.1**

**குறுக்கு விசாரணை :-**

1. இந்த வழக்கில் ஒன்றாம் பிரதிவாதியாக நான் மட்டும்தான் பதில் உரை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மற்ற பிரதிவாதிகள் எனக்கு என்ன ஒரு முறை என்றால் என்னுடைய உடன் பிறந்தவர்கள் ஆவார்கள். வழக்கு சொத்தானது நான்கு பிரதிவாதிகளுக்கும் பாத்தியப்பட்ட சொத்து தான் என்றால் சரிதான்.

2.நான் என்ன தொழில் செய்வதற்காக வாதிக்கு கடையை வாடகைக்கு விட்டேன் என்றால் கோழி வியாபாரம் செய்வதற்காக. வாதி அந்த கடையில் என்ன தொழில் செய்து வருகிறார் என்றால் கோழி வியாபாரம் தான் செய்து வருகிறார். என்னுடைய பதில் உரையில் நான் கூறியுள்ளவாறு வாதி வேறு தொழில் மாற்றிவிட்டார் என்று கூறியிருக்கிறேன் அது என்ன தொழில் மாற்றம் என்றால் மீன் கடை. தாவா கடைக்கு எவ்வளவு முன்பணம் தொகை கொடுத்தார் என்றால் முன்பணம் எதுவும் நான் பெறவில்லை. மாத வாடகை எவ்வளவு என்றால் ரூபாய் 4000 ஆகும்.

3. தாவா கடை விலாசத்தில் வாதி ஜெராக்ஸ் கடை வைத்து வியாபாரம் செய்து வருகிறார் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதி வாடகை முன்பணமாக ரூபாய் 70 ஆயிரம் கொடுத்திருக்கிறார் அதை மறுப்பதற்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா கடையிலிருந்து வாதியை நான் கூறும் காரணத்திற்காக சட்டத்திற்கு உட்பட்டு காலி செய்வதற்காக ஏதேனும் நடவடிக்கை எடுத்து உள்ளேனா என்றால் இல்லை. நான் வாதியை தாவா கடையிலிருந்து சட்டத்திற்கு புறம்பாக காலி செய்ய முற்படுகிறேனா என்றால் இல்லை சட்டத்திற்கு உட்பட்டு காலி செய்ய தயாராக உள்ளேன். நான் கூறுவது

போன்று வாடி தொழில் மாற்றம் எதுவும் செய்யவில்லை என்றாலும் வாடகை பாக்கி எதுவும் இல்லை என்றாலும் சரியல்ல.

4. நான் அளவுக்கு அதிகமான முன்பணமும் கூடுதலான வாடகை கேட்டதால்தான் பிரச்சனை ஏற்பட்டதால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் தவறான விவரங்கள் கொண்டு சாட்சி மதிக்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிந்தது. மறு விசாரணை இல்லை.

ESHWAR VISWANATHAN

DISTRICT MUNSIF
Digitally signed by ESHWAR VISWANATHAN
Location: VANIYAMBADI
Date: 2025.11.21 16:22:56 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாணியம்பாடி.